தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**March 14, 2019**

**Page No: 7**



# காங்கிரஸ் ஆட்சியில் பெண்களுக்கு 33 % இடஒதுக்கீடு

## ராகுல் காந்தி உறுதி



சென்னை ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியில் புதன்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் மாணவிகளுடன் கலந்துரையாடும் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி.

**சென்னை, மார்ச் 13:** எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற்று காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால், பெண்களுக்கு 33 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கும் மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் என்று காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக தமிழகத்துக்கு புதன்கிழமை வந்த அவர், சென்னை, ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். அப்போது மாணவிகள் அவரிடம் பல்வேறு கேள்விகளை எழுப்பினர். அவற்றுக்கு ராகுல்காந்தி பதிலளித்துப் பேசியதாவது:

**தென்னிந்தியாவுக்கு பாராட்டு:** பெண்களுக்கு மதிப்பளிப்பதிலும், அவர்களுக்கு உரிய உரிமைகளை வழங்குவதிலும் வட இந்தியாவைக் காட்டிலும் தென்னிந்தியா மேம்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டின் கலாசாரம் தான் அதற்கு முக்கிய காரணம். அதேவேளையில், பெண்களின் நலனை பேணிக் காப்பதில், தமிழகம் இன்னும் முன்னோக்கிச் செல்ல வேண்டியிருக்கிறது. சட்டப் பேரவைகளிலும், மேலவைகளிலும், நாடாளுமன்றத்திலும், பெரு நிறுவனங்களிலும் தலைமைப் பொறுப்புகளில் போதிய அளவில் பெண்கள் இல்லை என்பதுதான் உண்மை. காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால், பெண்களுக்கு 33 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கும் மசோதா நிறைவேற்றப்படும்.

ஜிஎஸ்டி வரி சிறு, குறு வணிகர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. ஐந்து நிலையிலான வரி வரம்புகள் குழப்பமான சூழலையே உருவாக்கும். காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால், ஒரே மாதிரியான குறைந்த வரிவிதிப்பு முறை கொண்டுவரப்படும். மத்திய பாஜக அரசின் ஆட்சிக் காலத்தில், பெரு நிறுவன முதலாளிகளுக்காக பொருளாதார திட்டங்கள் வகுக்கப்பட்டதுதான் தேசத்தின் வளர்ச்சிக்கு மிகப் பெரியதாக தடையாக உள்ளது. நீரவ் மோடிக்கு அளித்த கடனில் மிகச் சிறிய பங்கை, இளைஞர்களிடம் அளித்திருந்தால் அதிக அளவிலான வேலைவாய்ப்பை உருவாக்கியிருப்பார்கள்.

தற்போது நான் (ராகுல்) 3 ஆயிரம் பெண்களுக்கு நடுவே நின்றுகொண்டு, அவர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் கூறி வருகிறேன். இதுபோன்று பிரதமர் மோடி இதுவரை எப்போதாவது மக்களிடம் நேரடியாகச் சென்று பேசியது உண்டா அவருக்கு ஏன் அந்த துணிச்சல் இல்லை. மத்திய பாஜக அரசு, வட இந்தியாவுக்கு மட்டும்தான் முக்கியத்துவம் அளிக்கிறது. தமிழகம் உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்களைச் சேர்ந்த பலரும் மத்திய அரசில் அங்கம் வகித்து நாட்டின் வளர்ச்சியில் பங்கெடுக்க வேண்டும் என்பதுதான் எங்களது விருப்பம். மத்தியில் காங்கிரஸ் ஆட்சியில் இருந்த போது, 2010-12 காலகட்டத்தில் ஜம்மு - காஷ்மீரில் பெரிய அளவில் தீவிரவாத நடவடிக்கைகள் இல்லை. அமைதிப் பாதைக்கு அந்த மாநிலத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான பல்வேறு நடவடிக்கைகளை காங்கிரஸ் அரசு மேற்கொண்டு, அதில் வெற்றியும் கண்டது. மோடி தலைமையிலான அரசு அந்த நிலையை மாற்றி விட்டது என்றார் ராகுல் காந்தி.

**ஹாய் ராகுல்:** முன்னதாக, கலந்துரையாடலில் பங்கேற்ற மாணவி ஒருவர் ராகுலிடம் கேள்வி எழுப்பியபோது, ஹலோ சார் என்று ஆரம்பித்தார். அப்போது அவரை இடைமறித்த ராகுல்காந்தி, தம்மை சார் என அழைக்க வேண்டாம், பெயரைக் குறிப்பிட்டே அழைக்கலாம் என்றார். ஆனால், அப்படி அழைப்பதற்கு முதலில் தயங்கிய அந்த மாணவி, பிறகு சமாளித்துக் கொண்டு 'ஹாய் ராகுல்' என்றார். அதைக் கேட்ட சக மாணவிகள் கரவொலி எழுப்பினர்.

**ராபர்ட் வதேரா:** ராபர்ட் வதேரா மீதான விசாரணை குறித்து கேட்டபோது, எந்த ஒரு நபரையும் விசாரிப்பதற்கோ அல்லது விசாரணை வளையத்துக்குள் கொண்டு வருவதற்கோ அரசுக்கு அதிகாரம் உள்ளது.

அதற்கு சட்டத்திலும் இடம் உள்ளது. ஆனால், அதற்காக குறிப்பிட்ட சிலர் மீது மட்டும் வேண்டுமென்றே விசாரணை நடவடிக்கைகளை முடுக்கி விடுவது சரியல்ல. ராபர்ட் வதேரா மீது விசாரணை நடத்துங்கள் எனக் கூறும் முதல் நபர் நான்தான். அதேவேளையில், ரஃபேல் விவகாரத்தில் அனில் அம்பானிக்கு ஆதரவாக, பிரதமர் செயல்பட்டது அனைவருக்கும் தெரியும். அவர் மீது மட்டும் ஏன் எந்த விசாரணையும் முன்னெடுக்கப்படவில்லை.

### மோடியை அரவணைத்தது ஏன்?

அன்புதான் அனைத்து மதத்துக்கும் அடிப்படை. அன்றைக்கு நாடாளுமன்றத்தில் பிரதமர் பேசும்போது மிகவும் ஆவேசமாகப் பேசினார். எனது குடும்பத்தைப் பற்றி கோபமாக பல வார்த்தைகள் கூறினார். ஆனால், எனக்கு பிரதமர் மீது வெறுப்போ, காழ்ப்புணர்ச்சியோ இல்லை. மாறாக உண்மையான அன்பு மட்டுமே உண்டு. பிரதமரின் ஆவேசப் பேச்சுக்கு பதிலாக அன்பை தர வேண்டும் என்று நினைத்ததன் வெளிப்பாடுதான் அன்று நிகழ்ந்த சம்பவம் என்றார் ராகுல்காந்தி.